11.4.2008

முதல்வர் கலைஞர் :– மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டப்பேரவையினுடைய தலைவர் கோ.க.மணி அவர்கள் முன்மொழிந்து சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் சுதர்சனம் அவர்களால் வழிமொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தின் மீது சில கருத்துக்களை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

சமூகநீதிக்கான பயணம் தமிழகத்தைப் பொறுத்த வரையில் நீதிக் கட்சி காலத்திலே அன்றைய அமைச்சர் முத்தையா அவர்களுடைய காலத்திலேயிருந்து தொடங்கி இன்றளவும் ஒரு நூற்றாண்டு காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 1920ஆம் ஆண்டுக்குப் பிறகு, முதல் கம்யூனல் ஜி.ஓ. எனத் தொடங்கி இட ஒதுக்கீடு மத்திய அரசு கல்வி நிலையங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகித இடஒதுக்கீட்டிற்கான தனிச்சட்டம் 2007ஆம் ஆண்டில் மத்திய அரசால் நிறைவேற்றப்பட்ட வரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

தமிழ்நாட்டில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர் ஆகியோர் இணைந்து கொடுத்த அழுத்தம் காரணமாக பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களும் இந்திய அரசியல் சட்டத்தில் இடஒதுக்கீட்டிற்கென முதல் திருத்தத்தை செய்திட முன்வந்தார்கள் என்பதை நாம் மறந்து விட முடியாது (மேசையைத் தட்டும் ஒலி). அன்று தொடங்கி இந்திய அரசியல் சட்டத்தில் 93வது திருத்தம் வரை இடஒதுக்கீட்டுப் பயணம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அகில இந்திய அளவில் இட ஒதுக்கீட்டிற்கான முதல் கதவு 1990ஆம் ஆண்டில் அன்றைய பிரதமர் வி.பி.சிங் அவர்களால் திறந்து வைக்கப்பட்டதை யாரும் மறந்துவிட இயலாது. அதன் காரணமாக மத்திய அரசுப் பணிகளிலே

இடஒதுக்கீடு கிடைத்தது. அப்பொழுது வட புலத்திலே நடைபெற்ற வன்முறை, மாணவர்களை தீக்குளிக்கச் செய்கின்ற அளவிற்கு நடைபெற்ற காட்டுமிராண்டித் தனமான எதிர்ப்புகள் இவைகளையெல்லாம் மீறி இன்றைக்கு சமூகநீதி வெற்றி பெற்றிருக்கின்றது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கொண்டு வந்து, உச்சநீதிமன்றத்தால் தடுக்கப்பட்டு, நம்மைப் போன்றவர்கள் நடத்திய – கொடுத்த போர்க் குரல் காரணமாக இன்றைக்கு சமூகநீதி நிலைநிறுத்தப்பட்டு 27 சதவிகித இடஒதுக்கீட்டுச் சட்டத்தின் வாயிலாக மத்திய கல்வி நிலையங்களில் இடஒதுக்கீடு கிடைத்துள்ளது. அது பற்றி நான் மத்திய மனித வளத் துறை அமைச்சர் மாண்புமிகு அர்ஜுன் சிங் அவர்களிடத்தில் தொடர்பு கொண்ட போது இதைப் பற்றி இன்னும் விரிவாக – குறிப்பாக சுட்டிக்காட்டப்படுகிற – இங்கே கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நண்பர்கள் எடுத்துக் காட்டியதைப் போல "கிரீமி லேயர்" பற்றி அமைச்சரவையிலே யோசிக்க இருக்கிறோம் என்று அவர் கூறியிருப்பது ஆறுதல் தரக் கூடிய ஒரு செய்தியாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதற்குப் பெயரே "கிரீமி லேயர்" – "கிருமி" அதிலே இருக்க வேண்டாம் என்பதுதான் நம்முடைய வாதம். அதை அவர்கள் விலக்கிக் கொள்கின்ற அளவிற்கு மத்திய அமைச்சரவை யோசித்து முடிவெடுக்கும். நம்முடைய போராட்டத்தினுடைய தொடர்ச்சியாக சமூகநீதி என்பது முற்றுப் பெற்றுவிட்ட ஒரு போராட்டம் அல்ல. இன்னும் முழுமையடைய வேண்டிய நிலை நிறைய பாக்கி இருக்கிறது. அதை நாம் நிறைவேற்றியாக வேண்டும். இந்தப் போராட்டத்தில் நாம் கொடுத்த குரலில் – இந்த அவையிலே எழுப்பிய அந்தக் குரலுக்கு அன்றைக்கும் சரி இன்றைக்கும் சரி ஆதரவாக நம்முடைய காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகள், பாட்டாளி மக்கள் கட்சி மற்றுமுள்ள விடுதலைச் சிறுத்தைகள், வெளியிலே சொல்லாவிட்டாலும் அ.தி.மு.க., ம.தி.மு.க. ஆகிய இந்தக் கட்சிகளுக்கெல்லாம் இது உடன்பாடானது தான்

என்பதை நான் அறிவேன். அவர்கள் பேச வேண்டும் பேச வேண்டும் என்று சுதர்சனம் அவர்களைப் பார்த்து கேட்டுக் கொண்டார். மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்று அதை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (அப்போது ம.தி.மு.க. உறுப்பினர் கண்ணப்பன் எழுந்து இட ஒதுக்கீடு குறித்து ஆதரவு தெரிவித்துப் பேசினார்.)

நண்பர் கண்ணப்பன் அவர்கள் காலதாமதமாக வந்து காலதாமதமாகவாவது இந்த ஒத்துழைப்பைத் தந்ததற்கு நான் நன்றி கூறிக் கொள்கிறேன்.